# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

## 42 - இந்து சமயம்

## புதிய பாடத்திட்டம்

## புள்ளி வழங்கும் திட்டம்

இது இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி ஒன்றின் மூன்று வினாக்களில் ஏதேனும் இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ள 5 வினாக்களில் ஏதேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் 5 வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் விடை எழுத வேண்டும். ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் பத்திரம் II இற்கு மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

- பத்திரம் I க்கு 50 x 1 = 50 புள்ளிகள்
- பத்திரம் II க்கு 5 x 20 = 100 புள்ளிகள்

இறுதிப்புள்ளி கணக்கிடல்

| | | |
|---|---|---|
| பத்திரம் I | - | 50 புள்ளிகள் |
| பத்திரம் II | - | 100 புள்ளிகள் |

இறுதிப்புள்ளிகள் - $50+\left(\frac{100}{2}\right)=100$

Department of Examinations - Sri Lanka

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ..................................................................................... ✓ $\frac{4}{5}$
.....................................................................................
.....................................................................................

(ii) ..................................................................................... ✓ $\frac{3}{5}$
.....................................................................................
.....................................................................................

(iii) ..................................................................................... ✓ $\frac{3}{5}$
.....................................................................................
.....................................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

Department of Examinations - Sri Lanka

## கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

Department of Examinations - Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

හින්දු ධර්මය I
இந்து சமயம் I
Hinduism I

42 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள்:**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* 1 தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத்** தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களுக்கு** அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

* 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தவில்லை. **பொருந்தாததைத்** தெரிவு செய்க.

1. (1) சுருதி (2) அபௌருஷேயம் (3) ஆகமம்
(4) சுயம்பு (5) பாஞ்சராத்திரம்

2. (1) பட்டினத்தடிகள் (2) பத்திரகிரியார் (3) குதம்பைச் சித்தர்
(4) [illegible] (5) அழுகணிச் சித்தர்

3. (1) சரியாபாதம் (2) பிராயச்சித்தவிதி (3) சிவலிங்க இலக்கணம்
(4) பவித்திரவிதி (5) அட்டமாசித்தி

4. (1) காஞ்சிப் புராணம் (2) [illegible] (3) [illegible]
(4) திருக்கைலாய ஞான உலா (5) திருவிரட்டைமணிமாலை

5. (1) ஆகமப்பிரியன் (2) சங்கீர்ணஜாதி (3) குணபரன்
(4) விசித்திரசித்தன் (5) மத்தவிலாசன்

* 6 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. **பொருந்தாத** அச்சோடிச் சொற்களைத் தெரிவுசெய்க.

6. (1) [illegible]
(2) [illegible] - முருகன்
(3) கோவர்த்தனம் - கண்ணன்
(4) கம்சன் வதம் - [illegible]
(5) காமன் தகனம் - [illegible]

7. (1) விவேகானந்த சபை - கொழும்பு
(2) இராமகிருஷ்ண மிஷன் - மட்டக்களப்பு
(3) சைவபரிபாலன சபை - திருகோணமலை
(4) அகில இலங்கை இந்துமாமன்றம் - கொழும்பு
(5) சைவவித்தியா விருத்திச் சங்கம் - யாழ்ப்பாணம்

8. (1) நவநாத சித்தர் - [illegible] சுவாமிகள்
(2) செல்லப்பா சுவாமிகள் - யோகர் சுவாமிகள்
(3) வைரமுத்துப் பண்டாரம் - கடையிற் சுவாமிகள்
(4) குழந்தைவேல் சுவாமிகள் - மகாதேவ சுவாமிகள்
(5) சித்தானைக்குட்டி சுவாமிகள் - பெரியானைக்குட்டி சுவாமிகள்

9. (1) கணபதி - கணங்களின் தலைவர்
(2) லம்போதரர் - தும்பிக்கை உடையவர்
(3) பிள்ளையார் - பிள்ளைகளுக்குரிய கடவுள்
(4) விநாயகர் - தனக்கு மேல் தலைவர் இல்லாதவர்
(5) கணேசன் - மனம், வாக்குக்கும், அறிவுக்கும் கடந்த நிலைக்கும் உரியவர்

10. (1) தர்மம் சர - தர்ம வழியில் நட
(2) சத்யம் வத - உண்மை பேசுக
(3) மாத்ரு தேவோ பவ - தந்தையைத் தெய்வமாகப் போற்றுக
(4) ஆச்சார்ய தேவோ பவ - குருவைத் தெய்வமாகப் போற்றுக
(5) அதிதி தேவோ பவ - விருந்தினரைத் தெய்வமாகப் போற்றுக

- 11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் அ, ஆ என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலுக்கு ஏற்ற விதத்தில் 'ஆ' நிரலில் உள்ள விடயங்கள் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவு செய்க.

11.

| அ | ஆ |
|---|---|
| (i) யசுர் வேதம் | A - ஆரியபட்டர் |
| (ii) வானியல் | B - [illegible] |
| (iii) தர்மசாஸ்திரங்கள் | C - தனுர்வேதம் |
| (iv) அதர்வண வேதம் | D - [illegible] |
| (v) மருத்துவம் | E - [illegible] |

(1) B A D C E (2) B A D E C (3) D C E A B (4) E A D B C (5) E C D B A

12.

| அ | ஆ |
|---|---|
| (i) திருவிருத்தம் | A - வாசிபோகம் |
| (ii) சித்தர்கள் | B - நம்மாழ்வார் |
| (iii) [illegible] | C - நம்பியாண்டார் நம்பி |
| (iv) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி | D - ஞான உலகம் |
| (v) [illegible] | E - [illegible] |

(1) B A C E D (2) B A E C D (3) C A B E D (4) C A E B D (5) E A B C D

13.

| அ | ஆ |
|---|---|
| (i) இருவினையொப்பு | A - கபிலர் |
| (ii) புருடன் | B - சாங்கியம் |
| (iii) சாங்கிய சூத்திரம் | C - பிரகிருதி |
| (iv) கேவலம் | D - மோட்சம் |
| (v) [illegible] | E - [illegible] |

(1) B D A E C (2) B E A D C (3) C B A D E (4) C B D A E (5) C D B A E

14.

| அ | ஆ |
|---|---|
| (i) [illegible] | A - [illegible] |
| (ii) குரு | B - இலிங்காயத் |
| (iii) இலிங்கம் | C - ஒழுக்கம் |
| (iv) வீரசைவர் | D - சிவனடியார் கூட்டம் |
| (v) சங்கமம் | E - சக்தி |

(1) A D B E C (2) A E D C B (3) B C D E A (4) D A E C B (5) E A C B D

Department of Examinations - Sri Lanka

| | அ | | ஆ |
|---|---|---|---|
| 15. (i) | அநுராதபுரக் காலம் | A - | ஆறுமுகநாவலர் |
| (ii) | பொலநறுவைக் காலம் | B - | சம்பந்தர் |
| (iii) | யாழ்ப்பாண இராச்சிய காலம் | C - | சதுர்வேதி மங்கலம் |
| (iv) | ஒல்லாந்தர் காலம் | D - | திருக்கரசைப் புராணம் |
| (v) | ஆங்கிலேயர் காலம் | E - | பறாளை விநாயகர் பள்ளு |

(1) BCADE (2) BCDEA (3) CBEAD (4) DABCE (5) ECDAB

- 16 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழ் தரப்பட்டுள்ளவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

16. '[illegible]' எனக் கூறும் சித்தாந்த சாத்திர நூல்
(1) திருவருட்பயன் (2) சிவப்பிரகாசம் (3) சிவஞானபோதம்
(4) இருபா இருபஃது (5) உண்மை விளக்கம்

17. நடராஜ மூர்த்தத்தில் சடாமுடி எதனைக் குறித்து நிற்கிறது?
(1) பொறுமை (2) ஞானம் (3) திசை (4) பேரறிவு (5) சக்தி

18. கண்ணகி வழிபாட்டுக்கு கி.பி. 2ஆம் நூற்றாண்டில் விழா எடுப்பித்தவன்
(1) கஜபாகு மன்னன் (2) கோவலன் (3) மாநாய்கன்
(4) பாண்டிய மன்னன் (5) சேரன் செங்குட்டுவன்

19. "நூல் முறை தெரிந்து சீலத்து ஒழுகு" எனக் குறிப்பிட்டவர்
(1) ஔவையார் (2) திருவள்ளுவர் (3) திருமூலர்
(4) பாரதியார் (5) குமரகுருபரர்

20. மாண்டூக்கிய காரிகையின் மூலம் வெளிப்படுத்தப்படும் தத்துவக் கொள்கை
(1) விசிட்டாத்துவைதம் (2) அத்துவைதம் (3) சைவசித்தாந்தம்
(4) சாங்கியம் (5) துவைதம்

21. கணபதியின் பிறப்பு பற்றிக் கூறுவது
(1) கந்த புராணம் (2) முத்கல புராணம் (3) பவிஷ்ய புராணம்
(4) பிரம புராணம் (5) ஆக்னேய புராணம்

22. பிரமாணக் கோட்பாடு என்பது
(1) அறிவுக்கோட்பாடு ஆகும்.
(2) கடவுட்கோட்பாடு ஆகும்.
(3) வாழ்வியற்கோட்பாடு ஆகும்.
(4) பதார்த்தக்கோட்பாடு ஆகும்.
(5) பிரபஞ்சத் தோற்றம் பற்றிய கோட்பாடு ஆகும்.

23. 'தீவினை விட்டீட்டல் பொருள்' என்பது
(1) கொள்ளை செய்து பொருளீட்டல்
(2) நல்வழியில் பொருள் சேகரித்தல்
(3) தீவினைகளுடாகப் பொருள் சேகரித்தல்
(4) பொருளின் தேடல் தீவினைகளில் தங்கியிருத்தல்
(5) அறத்தின் அடிப்படையில் தீவினை விடுத்துப் பொருளீட்டுதல்

24. சாங்கியத்துக்கும் யோகத்துக்கும் இடையிலுள்ள மிகப்பெரிய வேறுபாடு
(1) ஈஸ்வர தத்துவத்தை ஏற்றுக்கொள்ளல்
(2) கைவல்ய நிலையை எதிர்நோக்குதல்
(3) பிரகிருதியை காரணமாக வலியுறுத்தல்
(4) பிரகிருதி பரிணாமத்தை ஏற்றுக்கொள்ளுதல்
(5) போகங்களை அனுபவிக்கும் பொருளாக புருடன் விளங்குதல்



Department of Examinations - Sri Lanka

25. தன்னைவிடப் பிறர் ஒவ்வார் எனக் கருதும் நிலையில் ஆணவத்தின் குணம்
(1) விகற்பம் (2) மோகம் (3) மதம் (4) அராகம் (5) குரோதம்

26. வைணவ மரபில் காதலன் - காதலிக்கு இடையிலான உறவுமுறையாக அமைவது
(1) தாஸ்யபாவம் (2) மதுரபாவம் (3) சக்யபாவம்
(4) சாந்தபாவம் (5) வாத்சல்யபாவம்

27. சோழர் காலத்தில் தஞ்சையில் சுந்தரசோழன் நினைவாக மருத்துவம் ஒன்றினை அமைத்தவர்
(1) ராஜராஜன் (2) கரிகாலன் (3) குந்தவை
(4) ராஜேந்திரன் (5) இரண்டாம் குலோத்துங்கன்

28. பஞ்சயக்ஞங்களுள் அடங்குவன
(1) பிதிர்யக்ஞம், தேவயக்ஞம், பிரமயக்ஞம்
(2) பிதிர்யக்ஞம், மானுடயக்ஞம், சிவயக்ஞம்
(3) பூதயக்ஞம், கேள்வியக்ஞம், ஞானயக்ஞம்
(4) பிரமயக்ஞம், பிதிர்யக்ஞம், இல்லறயக்ஞம்
(5) பிதிர்யக்ஞம், இல்லறயக்ஞம், தேவயக்ஞம்

29. இந்துக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளை மாத்திரம் உள்ள சரிய தொகுதியைத் தெரிவு செய்க.
(1) தைப்பொங்கல், கந்தசஷ்டி, தீபாவளி
(2) கந்தசஷ்டி, திருக்கார்த்திகை, நவராத்திரி
(3) போகிப்பண்டிகை, திருக்கார்த்திகை, தீபாவளி
(4) தீபாவளி, சித்திரை வருடப்பிறப்பு, தைப்பொங்கல்
(5) தீபாவளி, மார்கழித் திருவாதிரை, சித்திரை வருடப்பிறப்பு

30. பல்லவர் கால சிற்பக்கலையுடன் தொடர்புடைய தொகுதியைத் தெரிவு செய்க.
(1) தர்மராஜரதம், பிடாரிரதம், சித்தன்னவாசல்
(2) காஞ்சி கைலாசநாதர் கோயில், சித்தன்னவாசல், எல்லோரா
(3) தர்மராஜரதம், பிடாரிரதம், மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்
(4) தர்மராஜரதம், காஞ்சி கைலாசநாதர் கோயில், சித்தன்னவாசல்
(5) காஞ்சி கைலாசநாதர் கோயில், மாமல்லபுரம் கடற்கரைக் கோயில், எல்லோரா

- 31 தொடக்கம் 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

31. **இராமாயணம்**
(1) வைஷ்ணவ சமயம் சார்ந்தது.
(2) ஏழு காண்டங்களைக் கொண்டது.
(3) பக்தி நெறியை வலியுறுத்துகிறது.
(4) இராமனை அவதார புருஷராகக் கூறுகிறது.
(5) தமிழ் மொழியில் துளசிதாசரால் பாடப்பட்டது.

32. **வழிபாட்டில் மருத்துவம்**
(1) ஆலயத்தை வலம் வருதல்
(2) தோப்புக்கரணம் (தோர்பிகரணம்) போடுதல்
(3) பஞ்சாங்க, அட்டாங்க நமஸ்காரங்கள் செய்தல்
(4) நந்தவனத்தில் மூலிகைச் செடிகளை வளர்த்தல்
(5) பல்லவ மன்னர்களால் மருத்துவர்களுக்கு மானியம் வழங்கப்பட்டமை

33. **இந்துசமயம்**
(1) பரந்த நோக்குடையது.
(2) பழமை வாய்ந்த சமயமாகும்.
(3) தனியொருவரால் தோற்றுவிக்கப்பட்டது.
(4) மனிதன் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகிறது.
(5) பல்வேறு வகையான வழிபாட்டு முறைகளைக் கொண்டது.

Department of Examinations - Sri Lanka

**34. சிந்துவெளியில் சைவம்**
   (1) நடனமாது வடிவம் நடராஜர் வடிவத்தை ஒத்தது.
   (2) திமில்படுத்த எருது வடிவங்கள் நந்தியை நினைவூட்டுகின்றன.
   (3) கிடைக்கப்பெற்ற கூம்புருவக் கற்கள் இலிங்க வடிவத்தைச் சுட்டுகின்றன.
   (4) கருவுயிர்க்கும் பெண் வடிவம் அர்த்தநாரி வடிவத்தை நினைவூட்டுகின்றது.
   (5) யோகியும் புடைசூழ்ந்துள்ள மிருகங்களும் பசுபதி வடிவத்தை நினைவூட்டுகின்றன.

**35. தைப்பொங்கல் திருநாள்**
   (1) சூரியன் மகர ராசியில் இருந்து கும்ப ராசிக்குச் செல்லும் நாளாகும்.
   (2) புதுப்பானையில் புது அரிசியிட்டுப் பொங்குவர்.
   (3) சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நாளாகும்.
   (4) வீட்டு முற்றத்தில் கொண்டாடப்படும்.
   (5) அறுவடைத் திருநாளாகும்.

- கீழ்வரும் பகுதியில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 36 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சோடியைத் தெரிவுசெய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>திருப்புகழ் | B<br>நமசிவாய தேசிகர் | C<br>கார்த்திகேயன் விக்கிரகம் | D<br>மண்ணை வைத்தியேஸ்வரம் | E<br>சுந்தரானந்தம் |
| F<br>புராதன விநாயகர் ஆலயம் | G<br>திருமுறை | H<br>திருக்கைலாய பரம்பரை | I<br>குமர ஞானமணி | J<br>கல்வளை அந்தாதி |

**36.** நகுலேஸ்வர ஆலயத்துடன் தொடர்புடைய சோடி
   (1) AB   (2) AC   (3) BC   (4) BG   (5) BH

**37.** திருவாவடுதுறை ஆதீனத்துடன் தொடர்புடைய சோடி
   (1) AI   (2) AJ   (3) BH   (4) BI   (5) BJ

**38.** ஒல்லாந்தர் காலத்தில் நிலவிய இந்து சமயத்துடன் தொடர்புடைய சோடி
   (1) BF   (2) DI   (3) EJ   (4) FI   (5) FJ

**39.** திருமந்திரத்துடன் தொடர்புடைய சோடி
   (1) BD   (2) DI   (3) EG   (4) FG   (5) FI

**40.** சுவாமி விபுலாநந்தருடன் தொடர்புடைய சோடி
   (1) AB   (2) DI   (3) EG   (4) EI   (5) FG

- 41 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புக்கு மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்க.

**41. சங்கர வேதாந்தத்தின் முக்கிய கோட்பாடு**
   (1) மாயையால் உலகம் தோன்றுவது   (2) ஜீவாத்மாக்கள் பந்தப்பட்டவை
   (3) பிரமமே உண்மைப் பொருள்   (4) ஈஸ்வரன் படைப்புக் கடவுள்
   (5) ஞானமே விடுதலைக்கு வழி

**42. சேயோன் மேய மைவரை உலகமும்**
   (1) சங்க இலக்கியங்களில் முருகன் போற்றப்பட்டார்.
   (2) முருகன் செந்நிறமுடையவன் எனக் குறிக்கப்படுகின்றார்.
   (3) முருகக் கடவுள் சேயோன் என அழைக்கப்படுகின்றார்.
   (4) பண்டைத் தமிழகத்தில் முருகன் முக்கிய கடவுள் ஆவார்.
   (5) குறிஞ்சி நிலத்துக்குரிய கடவுளாக முருகன் வழிபடப்பட்டார்.

Department of Examinations - Sri Lanka

**43. கோயிற் கிரியைகள்**
(1) ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டவை.
(2) ஆன்மார்த்தம், பரார்த்தம் என இருவகைப்படும்.
(3) திருமுறைகளை அடிப்படையாகக் கொண்டவை.
(4) அனைத்து மக்களின் ஆன்ம ஈடேற்றம் கருதிச் செய்யப்படுபவை.
(5) கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என நால்வகைப்படும்.

**44. விசிட்டாத்வைதம்**
(1) ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது என்பதைக் கூறுவது
(2) விசிட்ட விசேடியங்களுடன் தொடர்புபட்டது
(3) சத்ய பரிணாம வாதத்தை ஏற்றுக்கொள்வது
(4) சித் அசித் தொடர்பைக் கொண்டு விளங்குவது
(5) முப்பிரமாணங்களை ஏற்றுக்கொள்வது

**45. நகுலேஸ்வரம்**
(1) புராதன சிவாலயங்களில் ஒன்றாகும்.
(2) 'திருத்தம்பலேஸ்வரம்' என அழைக்கப்படுகின்றது.
(3) இலங்கையின் வடக்கே கீரிமலையில் அமைந்துள்ளது.
(4) ஆடி அமாவாசையன்று பிதிர்க்கடன் செய்யும் புனித இடமாகும்.
(5) நகுலமுனிவர் தவம் செய்து கீரிமுகம் நீங்கப்பெற்ற தலமாகும்.

**46. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சமூகப் பணி**
(1) அகராதிகளைப் பதிப்பித்தமை
(2) சமயப்பிரசங்கங்கள் செய்தமை
(3) சைவ தூஷண பரிகாரம் வெளியிட்டமை
(4) கஞ்சித்தொட்டித் தருமம் மேற்கொண்டமை
(5) வித்தியாநுபாலன யந்திரசாலையை நிறுவியமை

**47. பக்தி யோகம்**
(1) பகவத்கீதையில் கூறப்படுவது
(2) நான்கு யோகங்களில் ஒன்று
(3) பக்தி, பிரபக்தி என இரு வகைப்படும்
(4) அன்பின் வழியில் இறைவனை அடைதல்
(5) திருத்தொண்டர்களிடத்தில் பக்தி செலுத்துதல்

**48. இந்து அறிவியல் மரபில் சுஸ்ருதர்**
(1) தன்வந்திரியின் சீடராவார்.
(2) சுஸ்ருத சம்ஹிதையின் ஆசிரியராவார்.
(3) அறுவைச் சிகிச்சை முறையின் தந்தையாவார்.
(4) ஆயுர்வேத மருத்துவத்தின் முன்னோடியாவார்.
(5) மனநல மருத்துவம் பற்றிச் சிந்தித்தவராவார்.

**49. ஈழத்தில் சோதிடக்கலை வரலாறு**
(1) பஞ்சாங்க முறையுடன் தொடர்புடையது.
(2) ஆரியச் சக்கரவர்த்திகளினால் வளர்க்கப்பட்டது.
(3) கேரள சோதிடக் கலையின் செல்வாக்குக்குட்பட்டது.
(4) சரசோதிமாலையை முன்னோடியாகக் கொண்டது.
(5) மக்களின் மங்கல, அமங்கல நிகழ்வுகளுடன் தொடர்புடையது.

**50. இந்து சமயத்தில் அறம்**
(1) இதிகாசங்கள் அறத்தை வலியுறுத்துகின்றன.
(2) தரும சாஸ்திரங்களில் புருஷார்த்தம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
(3) பகவத்கீதையில் விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்தல் அறமாகும்.
(4) வேதப் பாடல்களில் வருணன் அறக்கடவுளாகப் போற்றப்பட்டுள்ளான்.
(5) சமுதாய ஒழுங்கைப் பேணவும் நெறிப்படுத்தவும் கட்டமைக்கப்பட்டுள்ளது.

Department of Examinations - Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2021 (2022)

විෂය අංකය / பாட இலக்கம்: **42**

විෂයය / பாடம்: **இந்து சமயம்**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය /பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 2 | 21. | 2 | 31. | 5 | 41. | 3 |
| 02. | 4 | 12. | 2 | 22. | 3 | 32. | 5 | 42. | 5 |
| 03. | 5 | 13. | 1 | 23. | 5 | 33. | 3 | 43. | 4 |
| 04. | 4 | 14. | 5 | 24. | 1 | 34. | 4 | 44. | 2 |
| 05. | 1 | 15. | 2 | 25. | 1 | 35. | 1 | 45. | 5 |
| 06. | 4 | 16. | 2 | 26. | 2 | 36. | 2 | 46. | 4 |
| 07. | 3 | 17. | 1 | 27. | 3 | 37. | 3 | 47. | 4 |
| 08. | 1 | 18. | 5 | 28. | 1 | 38. | 5 | 48. | 3 |
| 09. | 2 | 19. | 1 | 29. | 4 | 39. | 3 | 49. | 4 |
| 10. | 3 | 20. | 2 | 30. | 3 | 40. | 2 | 50. | 5 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 50 = 50

Department of Examinations - Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

හින්දු ධර්මය II
இந்து சமயம் II
Hinduism II

**42 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**
* பகுதி I இலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும், பகுதி II இலிருந்து எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (அ) வேதம் என்பதன் பொருளைத் தருக. (2 புள்ளிகள்)

 (ஆ) வேதத்தின் பகுதிகளைச் சுருக்கமாக அறிமுகம் செய்க. (4 புள்ளிகள்)

 (இ) வேதங்களில் வெளிப்படும் தத்துவ சிந்தனைகளை சுருக்கமாக விவரிக்குக. (6 புள்ளிகள்)

 (ஈ) வேதகால சமூகநிலை பற்றி விளக்குக. (8 புள்ளிகள்)

2. (அ) பொலநறுவைக் காலத்தில் இந்து சமய வளர்ச்சிக்குப் பங்காற்றிய மன்னர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

 (ஆ) பொலநறுவைக் காலத்துக்குரிய சிவாலயங்கள் **நான்கினைத்** தருக. (4 புள்ளிகள்)

 (இ) பொலநறுவைக் காலத்து வெண்கலப் படிமங்கள் பற்றிச் சுருக்கமாக விவரிக்குக. (6 புள்ளிகள்)

 (ஈ) பொலநறுவைக் காலத்தில் சைவ சமயம் வளர்ச்சி பெற்றவாற்றை விளக்குக. (8 புள்ளிகள்)

3. (அ) பண்டிகை என்பதன் பொருள் யாது? (2 புள்ளிகள்)

 (ஆ) சித்திரைப் புத்தாண்டில் இடம்பெறும் ஆசாரங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

 (இ) தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படும் முறையினைச் சுருக்கமாக விவரிக்குக. (6 புள்ளிகள்)

 (ஈ) பண்டிகைகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிப்படுத்துமாற்றை விளக்குக. (8 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka

## பகுதி II

4. மத்துவரின் துவைத வேதாந்தக் கொள்கையினை பின்வரும் தலைப்புகளில் விளக்குக.
   (அ) துவைதம் - சொற்பொருள் விளக்கம் (2 புள்ளிகள்)
   (ஆ) ஈஸ்வரன் (6 புள்ளிகள்)
   (இ) சீவன் (6 புள்ளிகள்)
   (ஈ) விடுதலையும் அதற்கான வழிகளும் (6 புள்ளிகள்)

5. இந்துசமய வரலாற்றில் ஆகமங்கள் பெறும் முக்கியத்துவத்தினை பின்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.
   (அ) ஆகமம் - பொருள் விளக்கம் (3 புள்ளிகள்)
   (ஆ) ஆகமம் கூறும் ஆலய அமைப்பு (4 புள்ளிகள்)
   (இ) ஆகமம் கூறும் ஆலயக் கிரியைகள் (5 புள்ளிகள்)
   (ஈ) இந்துப் பண்பாட்டில் ஆகமங்கள் (8 புள்ளிகள்)

6. சைவசித்தாந்த தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
   (அ) ஆன்ம இருப்பு
   (ஆ) ஆன்மாவின் இயல்புகள்
   (இ) சைவநாற்பாதங்கள்
   (ஈ) முத்தி (5 × 4 = 20 புள்ளிகள்)

7. இந்து ஆன்மிக மரபில் பின்வருவன பெறும் இடத்தினை விளக்குக.
   (அ) புருடார்த்தங்கள்
   (ஆ) ஆச்சிரமதர்மங்கள் (10 × 2 = 20 புள்ளிகள்)

8. இந்துக் கலைகளுள் பின்வருவனவற்றின் சிறப்பியல்புகளை விளக்குக.
   (அ) பண்ணிசை
   (ஆ) விக்கிரகக்கலை (10 × 2 = 20 புள்ளிகள்)

* * *

Department of Examinations - Sri Lanka

# பகுதி I

1. அ) வேதம் என்பதன் பொருளைத் தருக. (02 புள்ளிகள்)

ஆ) வேதத்தின் பகுதிகளைச் சுருக்கமாக அறிமுகம் செய்க. (04 புள்ளிகள்)

இ) வேதங்களில் வெளிப்படும் தத்துவ சிந்தனைகளை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

ஈ) வேதகால சமூகநிலை பற்றி விளக்குக. (08 புள்ளிகள்)

**அ) வேதம் என்பதன் பொருளைத் தருக.**

- 'வித்' எனும் வினையடியிலிருந்து தோன்றியது.
- அறிவு எனப் பொருள் கொண்டது.
- வேதங்களை அறிவு நூல்கள் எனக் கொள்ளல்

(02 புள்ளிகள்)

**ஆ) வேதத்தின் பகுதிகளைச் சுருக்கமாக அறிமுகம் செய்க.**

- நான்கு பகுதிகளைக் கொண்டது.

- அவை சங்கிதை, பிராமணம், ஆரண்யகம், உபநிடதம் என்பன.
  - சங்கிதை - மந்திரங்களின் தொகுப்பு
  - பிராமணம் - வேள்விக் கிரியைகள் பற்றியது
  - ஆரண்யகம் - வானப்பிரஸ்தனுக்குரிய அநுட்டானங்களைக் கொண்டது
  - உபநிடதங்கள் - உண்மைப் பொருள் பற்றிய விசாரணை

- நான்கும் கர்ம காண்டம், ஞான காண்டம் என இருவகையாகப் பிரிக்கப்படுகின்றது.
- இவற்றை கர்ம காண்டம், உபாசனைக் காண்டம், ஞான காண்டம் எனவும் பிரிப்பர்.

(04 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka

**இ) வேதங்களில் வெளிப்படும் தத்துவ சிந்தனைகளைக் குறிப்பிடுக.**

- இந்து மெய்யியல் தொடர்பான அடிப்படைச் சிந்தனைகள்.
- பரம்பொருள், ஆன்மா, பிரபஞ்சம் தொடர்பான விடயங்கள்
- ரிக்வேத 1 : 164 : 46 வது பாடல்

  “ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி
- பலகடவுட் கொள்கை, ஒருமைவாதக் கொள்கை, சந்தர்ப்பவாதக் கடவுட் கொள்கை.
- இருக்கு வேத யமசூக்தம் – இறப்புப் பற்றிய பாடல்கள்.
- ஆன்மாவின் இறப்பிற்குப் பிற்பட்ட நிலை.
- கன்மம் பற்றிய கருத்துக்கள்.
- இருக்கு வேத நாசதீய சூக்தம் பிரபஞ்சம் பற்றியது.
- வர்ண சூக்தங்கள்: ஒழுக்கம் பற்றிய கருத்துக்கள் வர்ணன் – ரிதர்ஷயகோபா.

**(06 புள்ளிகள்)**

**ஈ) வேதகால சமூக நிலை பற்றி விளக்குக.**

- வேதகால இலக்கியங்கள் அக்கால சமூகக் கட்டமைப்பு, சமூகத் தொடர்புகள் பற்றிக் கூறுகின்றன.
- இயற்கையை வழிபடுதல்.
- நால்வகை வர்ணங்கள் பற்றிய ஆரம்பக் கருத்துக்களைக் காணலாம்.
- நால்வகை வர்ணங்களின் கடமை பற்றிக் கூறல்.
- மக்கள் நலன் பேணும் ஆட்சி முறைமை.
- அரசனுடன் தொடர்புடைய சபா, சமிதி பற்றிய கருத்துக்கள்.
- வேதகால மக்களின் தொழில் முறைகள் – செல்வம் – பசு
- திருமணம், குடும்பம்.
- உணவு, உடை, உறைவிடம், பொழுதுபோக்கு, கல்வி.

**(08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**2. அ) பொலநறுவைக் காலத்தில் இந்து சமய வளர்ச்சிக்குப் பங்காற்றிய மன்னர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)**

**ஆ) பொலநறுவைக் காலத்துக்குரிய சிவாலயங்கள் நான்கினைத் தருக. (04 புள்ளிகள்)**

**இ) பொலநறுவைக் காலத்து வெண்கலப் படிமங்கள் பற்றிச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)**

**ஈ) பொலநறுவைக் காலத்தில் சைவ சமயம் வளர்ச்சி பெற்றவாற்றை விளக்குக. (08 புள்ளிகள்)**

**அ) பொலநறுவைக் காலத்தில் இந்துசமய வளர்ச்சிக்குப் பங்காற்றிய மன்னர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.**

- இராஜேந்திர சோழன்
- 2ஆம் விக்கிரமபாகு
- தாழிக்குமரன்
- குளக்கோட்டன்
- பன்மகேஸ்வரர்

**(02புள்ளிகள்)**

**ஆ) பொலநறுவைக் காலத்துக்குரிய சிவாலயங்கள் நான்கினைத் தருக.**

- முதலாம் சிவாலயம் முதல் பத்தாம் சிவாலயம் வரை (இரண்டாம் சிவாலயம் – வானவன் மாதேவீஸ்வரம்)
- விக்கிரம சோழேஸ்வரம்
- உத்தம சோழேஸ்வரம்
- பண்டித சோழேஸ்வரம்
- இராஜராஜேஸ்வரம்

**(04 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**இ) பொலநறுவைக் காலத்து வெண்கலப் படிமங்கள் பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.**

- பொலநறுவைக்காலத்தில் வெண்கலப் படிமங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன.
- 1907, 1908, 1960 போன்ற ஆண்டுகளில் கடவுளர், நாயன்மார் படிமங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.
- கடவுள் படிமங்கள் – நடராஜர், சோமஸ்கந்தர், பிரதோச மூர்த்தி.
- நாயன்மார் படிமங்கள் – சம்பந்தர், அப்பர், சுந்தரர், காரைக்காலம்மையார்.
- அக்காலத்தைய சோமஸ்கந்த வடிவத்தில் முருகனது வடிவம் சிதைந்த நிலையில் உள்ளமை.
- அப்பரின் வடிவம் திரிபங்க நிலையில் உள்ளது.
- கொழும்பு அருங்காட்சியகத்தில் இப்படிமங்கள் வைக்கப்பட்டுள்ளன.

**(06 புள்ளிகள்)**

**ஈ) பொலநறுவைக் காலத்தில் சைவம் வளர்ச்சி பெற்றவாற்றை விளக்குக.**

- இக்காலத்தில் இலங்கை மும்முடிச்சோழமண்டலம் எனவும் பொலநறுவை ஜனநாதமங்கலம் எனவும் அழைக்கப்பட்டன.
- சோழ அரசர்களின் பிரதிநிதி சோழ இலங்கேஸ்வரன் எனப்பட்டான்.
- மகாவம்சம், சூளவம்சம், இராஜாவலிய, பூஜாவலிய போன்ற இலக்கியங்கள் மூலமும் கல்வெட்டுக்கள் மற்றும் புதை பொருட்கள் மூலமும் சைவசமய வளர்ச்சியை அறியலாம்.
- பொலநறுவைப் பிரதேசத்தில் 10 சிவன் கோயில்கள், 4 விஷ்ணு கோயில்கள், 2 காளி கோயில்கள் கண்டு பிடிக்கப்பட்டன.
- சிவன் கோயில்களில் வானவன் மாதேவீஸ்வரம் முக்கியமானது. இது இராஜேந்திரனால் கட்டப்பட்டது. 2 ஆம் சிவதேவாலயம் என அழைக்கப்படுகின்றது.
- திருக்கோணேஸ்வரம், விக்கிரம சோழேஸ்வரம், உத்தம சோழேஸ்வரம், பண்டித சோழேஸ்வரம் போன்ற சிவன் ஆலயங்கள் வளர்ச்சி கண்டன.
- குருநாகல் கல்வெட்டு – விக்கிரமசாள மகேஸ்வரம், மெடிரிகிரியா கல்வெட்டு – பண்டித சோழேஸ்வரம் பற்றிக் கூறுகின்றன.
- தமிழகக் கோயில்களைப் போல ஆகம விதிப்படியான பூசைகள், தோத்திரப்பாராயணம் என்பவற்றிற்கு அரசர்கள் ஒழுங்கு செய்தனர்.
- நடராஜர், சோமஸ்கந்தர், பிரதோசமூர்த்தி ஆகிய தெய்வப் படிமங்களும் சம்பந்தர், அப்பர், சுந்தரர், காரைக்காலம்மையார் முதலிய நாயன்மார்களின் படிமங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

**(08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**3. அ) பண்டிகை என்பதன் பொருள் யாது? (02 புள்ளிகள்)**

**ஆ) சித்திரைப் புத்தாண்டில் இடம்பெறும் ஆசாரங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)**

**இ) தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படும் முறையினைச் சுருக்கமாக விவரிக்குக. (06 புள்ளிகள்)**

**ஈ) பண்டிகைகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிப்படுத்துமாற்றை விளக்குக. (08 புள்ளிகள்)**

**அ) பண்டிகை என்பதன் பொருள் யாது?**

சமயம் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் வருடத்தில் குறிப்பிட்ட தினங்களில் புத்தாடை தரித்தல், விருந்துபசாரம், வழிபாடு போன்றவற்றுடன் இணைந்ததாக சிறப்பு நிலையில் கொண்டாடப்படுவது. வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிப்படுத்துவன.

**(02 புள்ளிகள்)**

**ஆ) சித்திரைப் புத்தாண்டில் இடம்பெறும் ஆசாரங்கள் நான்கினைக் குறிப்பிடுக.**

- வீட்டினையும் சூழலையும் தூய்மை செய்தல்.
- மருத்துநீர் வைத்து நீராடல்.
- புத்தாடை அணிதல் / தோய்த்துலர்ந்த ஆடை அணிதல்.
- ஆலயத்திற்குச் சென்று முறையாக வழிபடல்.
- விருந்துபசாரம் - உணவுப் பண்டங்களைப் பரிமாறுதல் / உறவினர்களுடன் மகிழ்ந்திருத்தல்.
- பெற்றோர் மற்றும் பெரியார்களிடத்தில் ஆசி பெறுதல்.
- பகிர்ந்துண்ணுதல்.
- கைவிசேடம் கொடுத்தல், வாங்குதல்.

**(04 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**இ) தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படும் முறையினைச் சுருக்கமாகத் தருக.**

- தனுராசியிலிருந்து மகர இராசிக்கு சூரியன் செல்லும் நாளில் தைப்பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகின்றது.
- இப்பண்டிகையில் பிரதேசத்திற்குப் பிரதேசம் வெவ்வேறு முறைகள் பின்பற்றப்பட்டாலும் அடிப்படை விடயத்தில் எல்லோராலும் பின்பற்றப்படும் முறைகள்:
  - இந்நிகழ்வு சூரிய திசையை நோக்கியவாறு வீட்டு முற்றத்தில் அதிகாலையில் இடம் பெறும்.
  - அதிகாலையில் எழுந்து வீட்டு முற்றச் சூழலைத் தூய்மையாக்கி, கோலமிட்டு விளக்கேற்றி, புதுப்பானையை இஞ்சி, மஞ்சள், மாவிலைகளால் அலங்கரித்தல்.
  - அறுவடை செய்த புத்தரிசியை புதுப்பானையில் இட்டு பொங்குதல்.
  - பொங்கல் என்பது 'பொங்கிப் பெருகி வருவதே' என்பது மரபாகும்.
  - பொங்கலை சூரியனுக்குப் படைத்தல்.
  - குடும்பத்தோடும் உறவினர்களோடும் உண்டு மகிழ்தல்.
  - மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என்பன தொடர்ந்துவரும் நாட்களில் இடம்பெறுதல்.

**(06 புள்ளிகள்)**

**ஈ) பண்டிகைகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிப்படுத்துமாற்றை விளக்குக.**

- உடல், உளம் தூய்மையடைய வழிப்படுத்துகின்றன.
- அன்பு, அறம், அகிம்மை, செய்ந்நன்றி மறவாமை, பகுத்துண்ணல்.
- இறைவழிபாடு, பெரியோரை மதித்தல், வாழ்த்துக் கூறல், மன்னிக்கும் பண்புகள் முதலிய நற்பண்புகள் விருத்தியடைய வழி வகுக்கின்றன.
- கூட்டு வாழ்க்கை, சமூக ஒருமைப்பாடு படிமலாகும்.

**(08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**4. மத்துவரின் துவைத வேதாந்தக் கொள்கையினை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.**

**அ. துவைதம் - சொற்பொருள் விளக்கம் (02 புள்ளிகள்)**

**ஆ. ஈஸ்வரன் (06 புள்ளிகள்)**

**இ. சீவன் (06 புள்ளிகள்)**

**ஈ. விடுதலையும் அதற்கான வழிகளும் (06 புள்ளிகள்)**

**(02 + 06 + 06 + 06 = 20 புள்ளிகள்)**

**அ) துவைதம் - சொற்பொருள் விளக்கம்**

- துவைதம் எனும் சொல்லுக்கு இரண்டு என்பது பொருள். ஈஸ்வரன், சீவன் ஆகிய இரண்டும் இரண்டு என்ற நிலையினின்றும் நீங்கி ஒன்று எனும் நிலையை ஒருபோதும் அடைவதில்லை. இருமை எனும் பொருளில் ஈஸ்வரன், சீவன் என்பவற்றிற்கிடையிலான பேதத்தினை வலியுறுத்தி இருப்பினும் ஈஸ்வரன், சீவன், சடம் எனும் முப்பொருள் உண்மையைச் சாதித்தல்.

**(02 புள்ளிகள்)**

**ஆ. ஈஸ்வரன்**

- சகுணப் பிரம்மத்தை முதன்மைப்படுத்தல்.
- இறைவன் மட்டுமே சார்பற்றவன்.
- மிக உயர்ந்த உள்பொருள் (சர்வோத்மன்)
- தெய்வீக இயலான பண்புகளையும் குணங்களையும் உடையவர் (குணபூர்ணன்)
- ஈஸ்வரனாக மகாவிஷ்ணுவைக் குறிப்பிடுகின்றார்.
- ஆன்மாக்களின் அறிவுக்கும் விடுதலைக்கும் காரணமாக அமைபவன்.

**(06 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**இ. சீவன்**

- சீவன்கள் பல.
- எண்ணிக்கையற்றவை.
- ஆன்மாவானது பிரம்மத்தின் தன்மைகள் பலவற்றைக் கொண்டுள்ளது. ஆனால் கடவுளுக்குச் சமமானதல்ல.
- மூவகை ஆன்மாக்கள்
    - நித்தியமுத்தர்
    - முத்தர்
    - பெத்த நிலையில் உள்ளோர்
- முக்குணங்களின் அடிப்படையில் ஆன்ம விடுதலை தீர்மானிக்கப்படல்.

**(06 புள்ளிகள்)**

**ஈ. விடுதலையும் அதற்கான வழிகளும்**

- ஆன்மா தனது முயற்சியினால் நேரே விடுதலை பெறமுடியாது. இறைவனின் அருள் கைகூடும் பொழுதுதான் முத்திநிலை சாத்தியமாகின்றது.
- முத்தி நிலையில் ஆன்மா பேரின்பத்தை அனுபவிக்கின்றது. ஆனால் பிரம்மத்துடன் இரண்டறக் கலப்பதில்லை.
- ஞானம், பக்தி என்பன மோட்சம் அடைவதற்கான வழிகளாகும்.
- ஆன்மா வாயு புத்திரன் மூலமாக ஈஸ்வரனை அடையும்.
- நரகத்தை அடையும் ஆன்மாக்கள் என்றும் நரகவாசிகளாகவே இருக்கும். அவற்றிற்கு விமோசனமே கிடையாது.

**(06 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**5. இந்துசமய வரலாற்றில் ஆகமங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.**

| | |
|---|---|
| **அ) ஆகமம் - பொருள் விளக்கம்** | **(3 புள்ளிகள்)** |
| **ஆ) ஆகமம் கூறும் ஆலய அமைப்பு** | **(4 புள்ளிகள்)** |
| **இ) ஆகமம் கூறும் ஆலயக் கிரியைகள்** | **(5 புள்ளிகள்)** |
| **ஈ) இந்துப் பண்பாட்டில் ஆகமங்கள்** | **(8 புள்ளிகள்)** |
| | **(3 + 4 + 5 + 8 = 20 புள்ளிகள்)** |

**அ) ஆகமம் - பொருள் விளக்கம்**

- தொன்று தொட்டு வரும் அறிவு.
- ஆன்மா மல நாசம் பெற்று இறைவனை அடைய வழிகாட்டும் நூல்.
- பதி, பசு, பாசம் எனும் முப்பொருட் கருத்தினை விளக்கும் நூல்.
- ஆகமம் பற்றிய சிறப்பான விளக்கங்கள்.

**(03 புள்ளிகள்)**

**ஆ) ஆகமம் கூறும் ஆலய அமைப்பு**

- ஆலயம் அமைக்கும் இடத்தினைத் தெரிவு செய்தல்.
- ஆலய உறுப்புக்களை மனித உடலுடன் ஒப்பிட்டுக் கூறுதல்.
- ஆலய அமைப்பின் அளவைப்பிரமாணங்கள்.
- ஆலயமொன்றில் அமைய வேண்டிய பிராகாரங்கள் பற்றி காமிக ஆகமம் **பிரகார இலட்சண விதிப்படலத்தில்** கூறியுள்ளது.
- திருவுருவ வழிபாட்டின் ஊடாக ஆலய அமைப்பினை வகுத்துக் கூறுகின்றன.
- கர்க்ஷனம், பிரதிக்ஷ்டை என்பன ஆலய அமைப்புகளுடன் தொடர்புறுகின்றன.

**(04 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**இ) ஆகமம் கூறும் ஆலயக் கிரியைகள்**

- திருவுருவங்களின் அடிப்படையில் ஆலயத்தை மையமாகக் கொண்ட கிரியைகள்.
- பூஜா விதிப்படலம், மந்திரவதாரப் படலம் ஆகியன கிரியைகள் ஆற்றப்படும் விதிகள் பற்றிக் கூறுகின்றன.
- கோயிற் கிரியைகளானவை,
  - கர்ஷனம் - ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தினைப் பண்படுத்தல்
  - பிரதிஷ்டை - ஆலயங்களில் திருவுருவங்களைப் பிரதிஷ்டை செய்தல்
  - உற்சவம் - ஆலயத்தில் வருடம் ஒருமுறை இடம்பெறும் திருவிழா
  - பிராயச்சித்தம் - ஆலயக் கிரியையின் போது இடம்பெறும் குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை என நான்கு வகைப்படும்.
- பிரதிஷ்டையானது (கும்பாபிஷேகம், திருமுழுக்கு)
  ஆவர்த்தனம், அநாவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என நால்வகைப்படும்.
- நித்தியம், நைமித்தியம், காமியம் மற்றும் நிஷ்காமிய கிரியைகள் பற்றிக் கூறுகின்றன

**(05 புள்ளிகள்)**

**ஈ) இந்துப்பண்பாட்டில் ஆகமங்கள்**

- ஆலயம் தொழுவது சாலவும் சாலவும் நன்று
- பூர்வக்கிரியைகள், அபரக் கிரியைகள் போன்றன இந்துக்களின் பண்பாட்டியல் ரீதியான செயற்பாடுகளுக்கு அடிப்படையாக இருக்கின்றன.
- ஆன்மார்த்த / பரார்த்தக் கிரியைகள் தனிமனித மற்றும் சமூக மேம்பாட்டுக்கான நியமங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.
- திருக்கோயில்களை அடிப்படையாகக் கொண்ட குடிகள், குடிகளை அடிப்படையாகக் கொண்ட திருக்கோயில்கள்.
- கோயிலில்லாத ஊரிற் குடியிருக்க வேண்டாம்.
- ஆலயமில்லாத ஊர் அடவி காடு - அப்பர்
- ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்துப்பண்பாட்டுக் கூறுகள் வளர்ச்சியடைவதற்கான மூலங்கள்.
- விக்கிரகக் கலை உள்ளிட்ட கலைகளின் ஊடாக இந்துப் பண்பாடு வளர்கின்றது.
- தத்துவச் சிந்தனைகள் - அறம் மற்றும் அறிவியல் சிந்தனைகளின் வளர்ச்சி
- இலக்கிய மரபுகள், கிரியை நெறி வளர்ச்சி
- வாஸ்து முறைகள்
- இவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்துப்பண்பாடு மேலோங்குகின்றது.

**(08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**6. சைவசித்தாந்த தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.**

**அ) ஆன்ம இருப்பு**

**ஆ) ஆன்மாவின் இயல்புகள்**

**இ) சைவநாற்பாதங்கள்**

**ஈ) முத்தி**

**(05 x 4 = 20 புள்ளிகள்)**

**அ) ஆன்ம இருப்பு**

- முப்பொருளுண்மை.
- கடவுள் போலவே உயிர்களும் அநாதி.
- நித்தியப் பொருள்.
- ஆன்ம இருப்பினை நிலைநாட்டுதல் - ஆன்ம மறுப்பு வாதிகளின் கருத்தியல்களை மறுத்துரைத்தல்.

“உளதில தென்றலின்.” - சிவஞானபோதம்

“அந்தக் கரணம் அவற்றிலொன்றன்றவை.” - சிவஞானபோதம்

“உயிரெனப்படுவது இந்த உடலின் வேறுளதாய்” - சிவஞானசித்தியார்

**(05 புள்ளிகள்)**

**ஆ) ஆன்மாவின் இயல்புகள்**

- உயிர்கள் என்றுமுள்ள நித்தியப் பொருள்கள்
- எண்ணிறைந்தவை - “பிறந்தநாள் மேலும்..”, “எண்ணரிதாய் நித்தமாய்...”
- சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவை.
- அறிவித்தால் அறியுந்தன்மை.
- சார்ந்ததன் வண்ணமானவை - “சத்தசத்தைச் சாராது..”
- மலபந்தங்களுடன் தொடர்புடையவை.
- ஆன்மாக்கள் மூவகைப்படும்.
- மூவகை அவத்தைகளை உடையவை.
- வினைகளுக்கேற்ப பிறவிகளை அனுபவிப்பவை. **(05 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**இ) சைவ நாற்பாதங்கள்**

- சைவ சித்தாந்தம் கூறும் ஆன்ம விடுதலைக்கான வழிகள்
- சைவநாற்பாதங்கள் தொடர்பான விளக்கம்

  சரியை – புறக்கருவிகளால் இறைவனின் உருவத்திருமேனியினை நோக்கிச் செய்யப்படுவன

  கிரியை – அக, புறக் கருவிகளால் இறைவனின் அருவுருவத்திருமேனியினை நோக்கிச் செய்யப்படுவன

  யோகம் – அகக்கருவியினால் இறைவனின் அருவத்திருமேனியினை நோக்கிச் செய்யப்படுவன

  ஞானம் – முத்திருமேனி கடந்த இறைவனை ஞானத்தினால் அறிதல்
- "விரும்பும் சரியை முதல் மெஞ்ஞானம் நான்கும்....."

**(05 புள்ளிகள்)**

**ஈ) முத்தி**

- ஆன்மாக்களின் இறுதி இலட்சியம் இறைவனுடன் இரண்டறக் கலத்தலாகும். இதுவே முத்தி என்பர்.
- ஆன்மாக்கள் தமது கட்டுப்பாடுகளில் இருந்து விடுபட்டு இறைத் தன்மை பெறுதல்.
- அத்துவிதமுத்தி.
- சச்சிதானந்தனைக் கூடி நித்தியானந்தத்தை அடைதல்.
- தாள் + தலை = தாடலை
- "தாடலை போல் கூடியவை தானிகளா...." – திருவருட்பயன்
- இறைவன் துணை அவசியம் – "அவனருளாலே அவன் தாள் வணங்கி.."
- இருவினையொப்பு, மலபரிபாகம், சக்திநிபாதம் என்பவற்றின் மூலம் சிவத்தன்மை பெறுதல்.

**(05 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**7. இந்து ஆன்மீக மரபில் மேல்வருவன பெறும் இடத்தினை விளக்குக.**

**(அ) புருடார்த்தங்கள்**

**(ஆ) ஆச்சிரம தர்மங்கள்**

**(10x 2 = 20 புள்ளிகள்)**

**(அ) புருடார்த்தங்கள்**

- மனித வாழ்வினை மேம்படுத்துவதற்காக இந்துசமயம் வகுத்து அமைத்த அறநெறி முறைகளில் ஒன்று.
- இவை தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் எனப்படும்.
- இதனை அறம், பொருள், இன்பம், வீடு என்பர்.

**அறம்:**

- வேதோகிலோ தர்ம மூலம் – ஸ்மிருதி வாக்கு.
- குருகுல வாசம் முடித்து வீடு திரும்பும் மாணவனுக்கு ஆசிரியர் கூறும் உபதேசங்களுள் அறம் முதன்மையானது.
- மகாபாரதம், இராமாயணம் எனும் இதிகாசங்கள் தர்மத்தின் வழி வாழ்வதற்கான வழிகாட்டல்களை உள்ளடக்கியுள்ளன.
- தர்ம சாஸ்திரங்களில் தர்மம் பற்றிய சிந்தனைகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.
- தமிழ் நூல்களில் அறம் பற்றிய கருத்துக்கள் இடம்பெறுகின்றமையினை எடுத்துக் காட்டல்.

**பொருள்:**

- வையத்துள் வாழ்வாங்கு வாழப் பொருள் அவசியம்.
- திருக்குறள் முதலிய இலக்கியங்களில் பொருளீட்டல் பற்றிய கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.
- இல்வாழ்வான் இல்லறம் நல்லறமாக அமைய அறத்தின் வழி பொருளீட்டல் வேண்டும்.
- அறவழிப்பட்ட பொருள் ஆன்மிக இலட்சியத்தை அடைய உதவும்.
- இதுவே அறத்தையும் இன்பத்தையும் தரவல்லது.

**இன்பம்:**

- சமய நூல்கள் இன்பத்தை சிற்றின்பம், பேரின்பம் என வகுத்து நோக்கும்.
- ஆணும் பெண்ணும் கருத்தொருமித்து அனுபவிப்பதே சிற்றின்பம்.
- இறைவனைச் சார்ந்து அனுபவிப்பதே பேரின்பம்.

  “கண்டு கேட்டு உற்று உணர்ந்து உண்டு உழலும்....”
- இன்பமும் அறவழியில் அனுபவிக்க இந்து சமயம் வழிகாட்டுகின்றது.

Department of Examinations - Sri Lanka

**வீடுபேறு:**

- ஆன்ம இலட்சியத்தின் இறுதிப்பேறு.
- அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் அறத்தின் வழி நின்றனுபவிக்கும் போது, இறுதியில் வீடுபேறு தானாக அமையும்.
- துன்பங்களில் இருந்து விடுதலை பெறுவதோடு ஈடிணையற்ற ஆனந்தத்தை உணர்ந்து அனுபவிப்பதே வீடுபேறாகும்.

  “ஈதல் அறம் தீவினை விட்டீட்டல் பொருள் எஞ்ஞான்றும்.....”

**(10 புள்ளிகள்)**

**(ஆ) ஆச்சிரம தர்மங்கள்**

- இந்துக்கள் மனித வாழ்வினை பிரம்மச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் எனும் நான்கு நிலைகளை வகுத்துள்ளனர்.

**பிரம்மச்சரியம்:**

- தனிமனித வாழ்க்கையின் முதலாவது படிநிலை.
- உலக வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கற்றல்.
- மெய்ப்பொருளை நோக்கி மாணவனை அழைத்துச் செல்லும் கல்வி முறைமை.
- புலனடக்கம், நல்லொழுக்கம், ஆசாரம் பேணுதல், கல்விகற்றல் முதலானவை பிரம்மச்சரியத்தின் சிறப்புகளாகும்.

**கிருஹஸ்தம்:**

- வாழ்க்கையின் இரண்டாவது படிநிலை
- தனது கல்விப்பருவத்தை நிறைவு செய்த ஒருவன் திருமணம் செய்து இல்லற வாழ்க்கையை தன் மனையாளுடன் மேற்கொள்ளும் நிலை.
- அறம், பொருள், இன்பம் என்பவை இல்வாழ்வானுக்காக விதந்துரைக்கப்பட்டவை.
- ஏனைய படிநிலைகளில் இருப்பவர்களுக்கான முக்கிய நிலை.

  “இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்......”

**வானப்பிரஸ்தம்:**

- வாழ்க்கையின் மூன்றாவது படிநிலை.
- வாழ்க்கைக் கடமைகளைத் துறந்து மனையாளுடனோ அல்லது தனியாகவோ வனம் சென்று தனது தேவைகளைக் குறைத்து தவம் முதலிய விடயங்களில் நாட்டத்தைச் செலுத்துதல்.

Department of Examinations - Sri Lanka

**சந்நியாசம்:**

- வாழ்க்கையின் இறுதிப் படிநிலை.
- முற்றும் துறத்தல்.
- உலகப்பற்றுக்களைத் துறந்த நிலையில் ஊர்தோறும் சென்று யாசகம் பெற்று ஆன்மிக இலட்சியத்தை அடையும் வரை வாழ்தல்.
- இறைவனுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து இறை இன்பத்தில் திளைக்கும் நிலையாகும்.

**(10 புள்ளிகள்)**
**(மொத்தப் புள்ளிகள் 20)**

Department of Examinations - Sri Lanka

**8. இந்துக் கலைகளுள் மேல்வருவனவற்றின் சிறப்பியல்புகளை விளக்குக.**

**(அ) பண்ணிசை**

- தமிழ் மக்களின் பாரம்பரிய இசையில் பண் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.
- பழந்தமிழ் நூல்களில் பண்ணிசை பற்றிக் கூறுவது - பஞ்சமரபு.
- தலை, மிடறு, நெஞ்சு, மூக்கு, இதழ், பல், நா, அண்ணம் என்னும் எட்டு இடங்களிலும் படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு ஆகிய எண்வகை முயற்சியாலும் பண்ணப்படுவதே பண் - பஞ்சமரபு
- பண் கர்நாடக இசையில் இராகம் என அழைக்கப்படுகிறது.
- பழந்தமிழ் கூறும் முத்தமிழில் இறை என்பது தமிழ்ப் பண்ணிசையையே குறிக்கும்.
- நற்றிணை, பரிபாடல், சிலப்பதிகாரம், காரைக்காலம்மையார் பாடல்கள் போன்றவற்றில் பண் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பல்லவர் காலத்தில் பண்ணிசை உன்னத வளர்ச்சி பெற்றது.
- பண்கள் பல பயிலப்பட்டன.
- நாயன்மார்கள் தேவாரங்களில் பண்களைப் பயன்படுத்தினர்.
- தேவாரங்களில் 23 பண்கள் இடம்பெற்றுள்ளன.
- திருமுறைகண்ட புராணத்தில் பாணர்மரபில் தோன்றிய வல்லி என்னும் பெண் இசையமைத்தார்.
- தேவாரங்களும் திருவாசகமும் பண்சுமந்த பாடல்கள்.
- பஞ்சபுராணம் ஓதும் முறை பண்ணிசை மரபாகக் கொள்ளப்படுகின்றது.
- தோத்திரங்கள் பண்ணோடு ஓதப்படுவதனால் இறைவனிடம் அன்பும் ஈடுபாடும் பக்தியும் ஏற்படுகின்றன.

**(10 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**ஆ. விக்கிரகக்கலை**

- சிற்பக் கலையுடன் மிக நெருங்கிய கலை.
- வி + கிருஹம் – விக்கிரகம் – இறைவனின் மேலான இருப்பிடம்.
- திருவுருவங்களை ஆலயத்தில் தூண்கள், சுவர்கள், அதிட்டானங்கள் போன்ற இடங்களில் செதுக்குமிடத்து அவை சிற்பங்களாக அமைகின்றன.
- ஆரம்ப காலத்தில் விக்கிரகங்களை அமைப்பதற்குரிய மூலப்பொருளாக கருங்கற்களே பயன்படுத்தப்பட்டன.
- காலப்போக்கில் உலோகங்களும் வேறு பொருட்களும் பயன்பட்டன.
- விக்கிரகம் அமைப்பதற்குரிய மூலப்பொருட்கள் பற்றி மானசாரம் கூறுகின்றது.
    1. அசையும் தன்மை கொண்டவை – சல விக்கிரகங்கள்
    2. நிலையாக நிறுவப்படுபவை – அசல விக்கிரகங்கள்
    3. நகர்த்தக் கூடியதாக இருப்பினும் நகர்த்தப்படக் கூடாது எனும் நோக்கில் நிறுவப்படுவது – சலாசல விக்கிரகங்கள்
- சலவிக்கிரகங்கள் பொன், வெள்ளி, செம்பு, சுதை, சர்க்கரை, ஓடு முதலியவற்றாலானவை.
- அசல விக்கிரகங்கள் கல், மரம் போன்றவற்றாலானவை.
- உலோகங்களில் வார்க்கப்பட்ட பல படிமங்கள் பல்லவர், சோழர், விஜயநகரர் காலங்களில் தோற்றம் பெற்றன.
- விக்கிரகம் வார்க்கப்படும் முறைகளை ஆகமங்கள், சிற்பசாஸ்திரங்கள் என்பன கூறுகின்றன.
- விக்கிரகங்கள் வார்க்கப்படும் முறை பற்றி விளக்கப்படுதல் வேண்டும்.
- மதுசிக்ஷ்ட விதான முறை.

**(10 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் 20)**

❋ ❋ ❋

Department of Examinations - Sri Lanka